# அகநானூறு காட்டும் நகரப் பண்பாடு

*முனைவர் கு. சீனிவாசன்*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருக்கோயிலூர்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783605

**ஆய்வுச்சுருக்கம்**

*சிற்றூர், ஊர், நகரம், நாடு என்பன மக்கள் வாழும் இடங்களைக் குறிக்க வந்த சொற்களாகும். இந்தச் சொற்களை இலக்கியங்களிலும் மற்றும் தொல்பொருள் சான்றுகளிலும் கல்வெட்டுக்களிலும் காணமுடிகிறது. சங்க இலக்கியங்கள் நகரங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளன. சங்க இலக்கிய அகநூல்களில் ஒன்றான அகநானூறு மக்களின் வாழ்விடங்களைப் பற்றிய செய்திகளை சுட்டிக்காட்டும் தன்மையை எடுத்துரைக்கின்றது.*

**முன்னுரை**

நகரம்என்பதுகுறித்துசமூகவியலாளர்கள் விரிவான விளக்கம் தருவர். அவர்கள் தரும் விளக்கத்தின்படி, மக்கள் தொகை மிகுந்து, வேளாண்மை அல்லாத பிற தொழில்கள் நடைபெறும் இடம் என்று சுருக்கமாகக் கூறலாம். தமிழக வரலாற்றில் நகரம் என்பது புதிதான ஒன்றல்ல. பண்டைத் தமிழர்கள் தாம் வாழும் நிலப்பகுதியை அய்ந்து திணைகளாகப் பகுத்துக் கொண்டதுடன் ஒவ்வொரு திணைக்கும் முதல் - கரு - உரி என மூன்று பொருள்களைத் தொல்காப்பியர் பகுத்துக் கூறியுள்ளார். இவற்றுள் கருப்பொருள் என்பது குறித்துக் கூறும் நூற்பாவின் இறுதியில் ''அவ்வகை பிறவும்'' என்று குறிப்பிட்டுள்ளார். இந்நூற்பாவிற்கு உரை எழுதிய உரையாசிரியர் நச்சினார்க்கினியர் ஒவ்வொரு திணைக்கும் உரிய ஊரின் பெயர்களைச் சுட்டுகிறார். நகர நம்பியர், நகரப் பரத்தையர், நகரவர், நகரவாயில் என்ற சொல்லாட்சிகள் காப்பியங்களில் இடம் பெற்றுள்ளதுடன் நகர் என்றழைக்கப்படும் நிலப்பகுதியின் வாணிபம், செல்வச் செழிப்பு என்பனவற்றை வெளிப்படுத்துகின்றன. பிற்காலச் சோழர் ஆட்சியின் போது நகரம் என்பது வணிகர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்ததையும், நகரத்தார் என்ற சொல்லாட்சி இருந்ததையும், கல்வெட்டுக்கள் பதிவு செய்துள்ளன. அகழ்வாய்வுகளின் போது கிட்டிய சான்றுகளும் நகரம் என்ற அமைப்பு தமிழர் நாகரீக வரலாற்றில் இடம் பெற்றிருந்தமைக்குச் சான்று பகர்கின்றன. அவ்வகையில் அகநானூற்றில் காணலாகும் நகரப் பண்பாட்டினைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்**

நெகம(ம்) - நிகம(ம்) - நியமம் - நகரம் நகரமயமாதல் - நகரவாழ்க்கை - தலைவியின் அழகும் - நகரத்தின் அழகும் ஓர் ஒப்பீடு - உறத்தை, சிராப்பள்ளி, மதுரை - உறையூர், கோழி - அறம் நிலைபெற்ற உறந்தை - மதுரை - பாண்டியர் கூடல் வெற்றி - கருவூர் வேளிர் தலைநகர் - முசிறி - கொற்கை - வாகைப் பெருந்துறை - குழுமூர்.

**சங்க இலக்கியத்தில் நகரம்**

சங்க இலக்கியத்தில் நகர் என்ற சொல் பலவிடங்களில் பயின்று வந்துள்ளது. ''நகர் என்ற சொல் மன்னர் வீடு, மன்னர்க்குச் சமமான செல்வம் உடையவர்கள் வீடு' என்று பொருள் தந்தது. அகநானூற்றுப் பாடல்களில்

நகர் என்ற சொல் பெரும்பாலும் செல்வர்கள் வீடாகவே இடம்பெற்றுள்ளது என்பதை,

**அல்குபதம் மிகுந்த கடியுடை வியல்நகர்,**
**செல்வுழிச் செல்வுழி மெய்ந் நிழல்**

**(அகம். 49:14-15)**

என்பதால் அறியலாம்.

காலப்போக்கில் நகர் என்ற சொல் நகரத்தை குறிக்கத் தொடங்கியதை,

**கடும் பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை**
**திரு மா வியல் நகர்க் கருவூர் (அகம். 93:20-21)**

என்ற அகநானூறுவழி அறியலாம். இந்தப் பொருள் மாற்றம் சங்க காலத்தில் ஏற்பட்டது. நகர் என்பதற்குக் கோயில் என்ற பொருளும் உண்டு[2] என்பர்.

நகர எழுச்சியையும், பண்பாட்டையும் அறிந்து கொள்ளப் பத்துப்பாட்டையும், காப்பியங்களையும் பார்க்க வேண்டியுள்ளது. சங்க இலக்கியம் யாவற்றையும் செறிவாகப் பேசும் தன்மையுடையது ஆகும்.

**கொடு மணம் பட்ட வினைமாண் அருங்கலம்**

**(பதிற்; 74:5.)**

என்று அரிசில்கிழார் கூறுவார். இந்த நான்கு சொற்களில் ஒரு பெரிய நகரமே புதைந்து கிடக்கின்றது என்பது ஈரோடு மாவட்டம் கொடுமணலில் அகழாய்வு செய்தபோது உறுதிப்பட்டது[3] என்ற கருத்துரை இங்கு குறிப்பிடத்தக்கது.

சங்ககால நகர வாழ்க்கை இருந்த தன்மை பற்றி அறிந்துகொள்ள இலக்கியச் சான்றுகள் மட்டுமின்றி அகழ்வாய்வுச் சான்றுகளும் இன்றியமையாதனவாக விளங்குகின்றன. கொடுமணம், கருவூர், பொருந்தில் ஆகிய ஊர்கள் சங்க காலத்தைச் சேர்ந்தவை. ஆனால் அவை எந்த நூற்றாண்டிலிருந்து பயன்படுத்தப்பட்டன என்பதை அறிவதற்கும் அகழ்வாய்வுச் சான்றுகளே உறுதியான சான்றுகளாகும். இலக்கியச் சான்றுகள் காலக்கணிப்பிற்கு உதவும் என்று கூறமுடியாது. காரணம் இலக்கியம் புதுப்பித்து ஓலைகளில் எழுதப் பெறுவதால் நமக்குக் கிடைக்கும் ஏடுகள் 200 அல்லது 300 ஆண்டுகள் பழமையுடைய எழுத்துகளில் எழுதப் பெற்றுள்ளன. ஆனால் சங்க காலம் 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இந்நிலையில் கல்வெட்டுச் சான்று, அகழாய்வுச்சான்று ஆகியவற்றை கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். காரணம் அகழாய்வுச் சான்றுகள் காலத்தை நிர்ணயிப்பதற்கு உறுதியான சான்றுகளாகும். மண்ணடுக்குகளின் வரிசையின் அடிப்படையில் காலம் நிர்ணயம் செய்யப்பெறுவதால் இவற்றால் ஒரு நகரத்தின் தோற்றம் ஏற்பட்ட காலத்தை உறுதிப்படுத்த முடியும். கொடுமணல் கி.மு.5-4 ஆம் நூற்றாண்டிலிருந்து வழக்கத்திலிருந்தது என்று உறுதியாகக் கூறலாம்.

அகழாய்வுச் சான்றுகள் அறிவியல் பூர்வமாக உறுதிப்படுத்தப் பெறுகின்றது. அவ்வூர்களில் கிடைத்த பானை ஓடுகளை அமெரிக்க நாட்டிற்கு அனுப்பிக் காலத்தை உறுதிப்படுத்தியுள்ளனர்4 அதனால் சங்ககால நகர வாழ்க்கை கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் தொடங்குகின்றது என்று உறுதிப்படுத்த முடியும்.

நெகம(ம்) - நிகம(ம்) - நியமம் - நகரம் வடமொழியில் நெகம என்பது நிகம என்று மாறித் தமிழில் நியமம் என்று திரிந்தது. நியமம் என்பது ஓர் ஊர். வலிமை வாய்ந்த தெய்வங்களையுடைய செல்லூரின் கிழக்கே அமைந்துள்ளது என்பர். கடல் போன்ற ஆரவாரத்தினையும், புதிய வருவாயினையும், இரும்பால் செய்யப்பட்ட படைக்கலன்கள் உண்டாக்கியவடுக்களையுமுடையமுகத்தினைக் கொண்ட அஞ்சாமையுடைய கோசர்கள் வாழும் ஊர் இது என்பதனை,

**அருந் திறற் கடவுட் செல்லூர்க் குணாஅது**
**பெருங் கடல் முழக்கிற்று ஆகி யாணர்**
**இரும்பு இடம் படுத்த வடுவுடை முகத்தர்,**
**கருங் கட் கோசர் நியமம் (அகம். 90:9-12)**

என்ற அகநானூற்று அடிகளால் அறியலாம். மேலும்,

**கொடி நிழற்பட்ட பொன்னுடை நியமத்து**

**(பதிற். 15:19.)**

என்றும்,

***கள்ளுடை நியமத்து ஒள்விலை கொடுக்கும்***
***(மேலது, 75:10.)***

என்றும் வரும் பதிற்றுப்பத்து அடிகளால் நியமம் என்பது கடைத்தெருவைக் குறிப்பதாக அமைகிறது. நகரத்தில் கள்விற்கும் கடையைக் குறிக்கக் கொடி கட்டப் பெற்றிருந்தது என்பது இதன் பொருளாகும்.

வடமொழியில் பயின்றுவரும் நெகம என்பதை நே+காம எனப் பிரித்துப் பொருள் கொள்கின்றனர். நே என்றால் அல்லாதது என்றும்காம என்றால் கிராமம் என்றும் பொருள் கொள்கின்றனர். இதற்குப் பொருள் கிராமம் அல்லாதது என்பதாகும். ஆகையால் வட நாட்டில் தொடக்கத்தில் ஒவ்வொரு குடியும் ஒரு குடியிருப்பினைப் பெற்று இருந்தன என்பதும், வாணிக எழுச்சியினால் பல குடிகள் தங்கி இருக்கும் குடியிருப்புப் பகுதி நெகாம என்று அழைக்கப் பெற்றது என்றும் வடநாட்டு அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்[5]. அந்தச் சொல் தமிழில் நியமம் என்று திரிந்து வழங்கப்பட்டது போலும்.

**நகரமயமாதல்**

கொடுமணல் ஒட்டுப் பொறிப்பிலும்[6], அரிட்டாபட்டி பிராமிக் கல்வெட்டிலும் நிகம, நிகமதோர்[7] ஆகிய சொற்கள் பயின்று வருகின்றன. இவ்விரு சான்றுகளும் நிகம என்பதற்கு நகரசபை என்றே பொருள் தருகின்றன. ஆனால் தமிழிலக்கியத்தில் பயின்றுவரும் நியமம் என்ற சொல் நகரத்தைக் குறித்தது. நகரம் தமிழ்நாட்டில் எழுச்சி பெற்ற காலம் கி.மு. 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2ஆம் நூற்றாண்டு வரையிலான காலமாகும். வடநாட்டில் நகரமயமாக்கல் தொடங்கிய காலத்தில் தமிழ்நாட்டிலும் நகரமயம் தொடங்கிவிட்டது என்பது தொல்லியல் சான்றுகளால் உறுதிப்படுகின்றது. தமிழ்நாட்டிலிருந்த பண்டைய நகரங்கள் (கரூர், மதுரை, உறையூர்) இன்று வரை வாழ்விடங்களாக இருப்பதால் பரப்பளவு அகழாய்வு நடைபெறுவதில் சிக்கல்கள் எழுந்தன. வடநாட்டில் கௌசம்பி, அக்கிசத்ரா, அஸ்தினாபுரா, சாரநாத், இராஜகிருகம், உஜ்ஜயினி போன்ற நகரங்கள் அழிந்தபின் குடியேற்றங்கள் நடைபெறவில்லை. அதனால் பண்டைய நகர வாழ்க்கை இருந்த நிலையை அப்படியே அறிய முடிகின்றது. ஆனால் தமிழ் நாட்டில் உள்ள பண்டைய நகரங்கள் அழிந்த நிலையில் இல்லை.

**நகர வாழ்க்கை**

எட்டுத்தொகை நூல்களில் நகரங்கள் பற்றிய குறிப்புகள் இருப்பினும் விரிவான செய்திகள் மதுரைக்காஞ்சியில் இடம் பெற்றுள்ளன. நகர வாழ்க்கையை,

***ஓவுக் கண்டன்ன இரு பெரு நியமத்து,***
***சாறு அயர்ந்து எடுத்த உருவப் பல்கொடி,***
***வேறு பல் பெயர ஆர்எயில் கொளக்கொள,***
***நாள் தோறும் எடுத்த நலம்பெறு புனை கொடி,***
..
..
***கண் பொருபு உகூவும் ஒண்பூங் கலிங்கம்***
***பொன் புனை வாளொடு பொலியக் கட்டி,***
***திண் தேர்ப் பிரம்பின் புரளும் தானை,***
***கச்சம் தின்ற கழல் தயங்கு திருந்து அடி,***
***மொய்ம்பு இறந்து திரிதரும் ஒற பெருந் தெரியல்***
***(மதுரை.வ.365-438.)***

என்று எடுத்து இயம்புகிறது.

காப்பியங்கள் நகர வாழ்க்கையை விரிவாகப் பேசுகின்றன. தமிழ்நாட்டு நகரங்கள் கி.மு.5ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.2ஆம் நூற்றாண்டு வரை படிப்படியாக வளர்ந்த நிலையைப் பாட்டுகளும், காப்பியங்களும் விரிவாகப் பேசுகின்றன.

வீதிகள், அரண்மனைகள், செல்வந்தர் தெருக்கள், பணியாளர் தெருக்கள், சிறுவாணிகர் தெருக்கள், பெருவாணிகர் தெருக்கள், படைத்தலைவர் தெருக்கள், ஐம்பெருங்குழு, எண்பேராயம் ஆகிய அமைப்பில் உள்ளவர்கள் வாழும் தெருக்கள் பலதரப்பட்ட மக்கள் வாழும் தெருக்கள் எனப் பல தெருக்கள் நகரத்தில் இருந்தமை பற்றி,

*வேயா மாடமும்: வியன் கல இருக்கையும்*
*பூவும், புகையும், மேவிய விரையும்*
*பகர்வனர் திரிதிரு நகர வீதியும்*
*பட்டினும், மயிரினும் பருத்தி நூலினும்*
*கட்டு நுண்வினைக் காருகள் இருக்கையும்*
*தூசும் துகிரும் ஆரமும் அகிலும்,*
*மாசு அறு முத்தும், மணியும், பொன்னும்*
*..*
*மீன்விலைப் பரதவர், வெள்உப்புப்பகருநர்*
*..*
*மரம்கொல் தச்சரும், கருங்கைக் கொல்லுரும்*
*மண்ணுள் வினைஞரும், மண்ணீட்டு ஆளரும்*
*பொன்செய் கொல்லரும், நன் கலம்*
*(சிலம்பு. இந்திரவிழா ஊர் எடுத்த காதை, 7-39.)*

எனச் சிலப்பதிகாரம் விரிவாகப் பேசுகின்றது. எல்லா நகரங்களிலும் குறிப்பாகத் தலை நகரங்களில் புறஞ்சேரி என்ற பகுதி இருந்துள்ளது. இங்கு பல்வேறு பாசண்டியர், சமயக்கணக்கர் தங்கியிருந்தனர். தத்துவ ஞானிகளும் புறஞ்சேரியில் தான் இருந்துள்ளனர். வெளியிலிருந்து வருபவர்கள் தங்கி நின்ற பகுதி புறஞ்சேரிப் பகுதி தான். இந்தப் பகுதியில் தான் எளிய மக்களும் வாழ்ந்தனர். நகர வாழ்க்கை பல நிலையில் உள்ள மக்கள் வாழுமிடமாகவும், பல சமயத்தினர் வாழுமிடமாகவும் பின்னர் மாறிவிட்டது. பலவிதத் தொழில் செய்வோர் புறச்சேரியில் வாழ்ந்ததை,

*கடை காப்பு அமைந்த காவலாளர்*
*மிடை கொண்டு இயங்கும் வியன் மலி மறுகும்*
*பல்மீன் விலைஞர் வெள' உப்புப் பகருநர்*
*எனைப் பெருந் தொழில் செய் ஏனோர் மறுகும்*
*மன்றமும் பொதியிலும் சந்தியும் சதுக்கமும்*
*புதுக்கோள் யானையும் பொன் தார்ப் புரவியும்*
*கதிக்கு உற வடிப்போர் கவின் பெறு வீதியும்*
*(மணி.காதை,கச்சி மாநகர் புக்க காதை, ப.29-61.)*

என்ற பாடலால் அறியலாம்.

**தலைவியின் அழகும் - நகரத்தின் அழகும் ஓர் ஒப்பீடு**

ஊரக வாழ்க்கை கிராம வாழ்க்கையைப் பிரதிபலித்தது. நகர வாழ்க்கை பல பண்பாடுகள் கலந்துள்ள நிலையைப் பெற்றது. அகப்பாடல்கள் நகரங்களைத் தலைவியின் பெருமைக்கும் அழகுக்கும் ஒப்பிட்டும் பேசுகின்றன.

பொன் மிகுந்த பெரிய நகரமாகிய பொதினியை ஒத்த ஒளி விளங்கும் நிறங்கொண்ட நுட்பமான வேலைப்பாடு செய்த பூண் அணிந்த மார்பகத்தாள் தலைவி என்பதனை,

*முழவு உறழ் திணி தோள் நெடுவேள் ஆவி*
*பொன்னுடை நெடுநகர்ப் பொதினி அன்ன நின்*
*ஒண் கேழ் வன முலைப் பொலிந்த (அகம். 15-17)*

மணம் கமழ் பாக்கத்துப் பகுக்கும்

*வளங் கெழு தொண்டி அன்ன இவள் நலனே*
*(அகம். 10:12-13)*

*ஒண்தொடி மகளிர் வண்டல் அயரும்*
*தொண்டி யன்ன என்நலம் தந்து*
*கொண்டனை சென்மோ (குறுந். 238:3-5.)*
*தொண்டி அன்ன பணைத் தோள்,*
*ஒண்தொடி, அரிவை (ஐங். 171:3-4.)*

என்ற பாடல்கள் உணர்த்துகின்றன.

**உறத்தை, சிராப்பள்ளி, மதுரை**

அகநானூற்றுப் பாடல்களில் உறந்தை, கூடல், மதுரை என்பன மிகுதியான பாடல்களில் குறிக்கப் பெறவில்லை. வடக்கே உள்ள மதுரை தெற்கே உள்ள மதுரை எழுச்சி பெறுவதற்குக் காரணமாயிற்று. ஷசமணர்களுக்கு வடமதுரைபுண்ணியதலமாக இருந்தமையால் இங்கு வந்த சமணர்கள் கூடல் நகருக்கு மதுரை என்று பெயரிட்டு இருக்கலாம். அழகர் மலையில் சமணர்கள் வெட்டிய கல்வெட்டுகளில் மதுரை என்ற பெயர் குறிக்கப்பட்டுள்ளது[8]. இக்கல்வெட்டுகள் கி.மு.2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. கல்வெட்டுகளில் கி.மு. 2 ஆம் நூற்றாண்டில் குறிக்கப் பெற்றாலும் இலக்கியத்தில் கி.பி.1-ஆம் நூற்றாண்டிலிருந்து தான் பயன்படுத்தப் பெறுகின்றது. இது இலக்கியத்திற்கும் கல்வெட்டிற்கும் இடையில் உள்ள வேறுபட்ட நிலை என்பர்[9] உறந்தைக்குக் கிழக்கில் உள்ள குன்று சிராமலை என்றும் அங்கு நிலைபெற்றிருந்த சமணப்பள்ளி சிராப்பள்ளி என்றும் அழைக்கப் பெற்றது.[10]

கூடல் மதுரை ஆனதைப் போலவே உறையூர் சிறாப்பள்ளி என்று வழங்கலாயிற்று. உறையூர் பல்லவர் காலத்தில் உரகபுரம் என்றாயிற்று.[11] உரகபுரம் என்பது பாம்பூர் என்று பொருள்படும். சோழர்கள் நாகர்கள் ஆகையால் உறையூரைப் பாம்பூர் என்றழைத்தனர்.[12] உறையூர், கோழி உறையூருக்குக் கோழி என்ற பெயரும் உண்டு.

**சோழ நல் நாட்டுப் படினே, கோழி**
**உயர்நிலை மாடத்து, குறும்பறை (புறம். 67:8-9.)**

அகநானூற்றுப் பாடல்களில் கோழி என்ற பெயர் குறிக்கப் பெறவில்லை. உறையூர் என்றே குறிக்கப் பெறுகின்றது. முதலில் உறையூர் தித்தன் என்ற வேளிர் மரபினரைச் சேர்ந்த வேளுக்குரியதாக இருந்தது. உறந்தை, தித்தன் வெளியனுடைய தலைநகராக விளங்கிய தன்மையை,

**வலிமிகும் முன்பின் பாணனொடு, மலிதார்த்**
**தித்தன் வெளியன் உறந்தை நாள் - அவைப்**
**பாடுஇன் தெண்கிணைப் பாடுகேட்டு அஞ்சி,**
**போர்அடு தானைக் கட்டி**
**பொராஅது ஓடிய ஆர்ப்பினும் பெரிதே**
**(அகம்.226:13-17)**

என்ற பாடலடிகள் வலியுறுத்துகின்றன.

தித்தன் வெளியன் உறந்தை என்று கூறுவதைக் கொண்டு சோழர்களின் முதல் அரசனாக இவன் இருக்கலாம்[13] எனக்கருதுவர். சங்க இலக்கியத்தில் தித்தன், சோழர் மரபினைச் சேர்ந்தவன் என்று கூறப்பெறவில்லை. அவன் வேளிர் மரபினைச் சேர்ந்தவன், பரணருக்குப் பின் வந்த நக்கீரர் பாடலில்தான் உறந்தை "சோழர் உறந்தை என கூறப்பெறுகின்றது.

**அறம் நிலைபெற்ற உறந்தை**

சோழனின் அறம் பொருந்திய நல்ல அவையினையுடையது உறந்தை என்பதனை,

**ஆரங் கண்ணி அடுபோர்ச் சோழர்**
**அறம் கெழு நல் அவை உறந்தை (அகம். 93:4-5)**

எனவும்,

**மறம் கெழு சோழர் உறந்தை அவையத்து**
**அறம் கெட அறியா தங்கு (நற். 400:7-8.)**

எனவும் இலக்கியங்கள் வழி அறியலாம். சோழர்கள் வருகைக்கு முன் இது வேளிர் தலைநகரமாக விளங்கியது. அதனால் உறையூர் முதலில் வேளிர் நகரமாக எழுச்சி பெற்று வேந்தர் எழுச்சிக்குப் பின் சோழர் தலைநகரமாக நிலைபெற்றுவிட்டது எனலாம் சோழர் மரபில் ஒன்பது குடியினர் இருந்துள் என்பதனை,

**ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்**
**இளவரசு பொறாஅர், ஏவல் கேளார்**
**வளநாடு அழிக்கும் மாண்பினர்**
**(சிலம்பு. நீர்ப்படைக் காதை : 119-221.)**

என்ற சிலப்பதிகார அடிகளைக் கொண்டு அறியலாம். அவர்கள் சோழர் என்ற ஒரு குடிப் பெயரின் கீழ் நிலைபெற்ற பின் உறையூர் கோழி என்று அழைக்கப் பெற்றது.

**மதுரை**

மதுரை என்றழைக்கப் பெற்ற கூடல் தொடக்கத்தில் அகுதை என்ற வேளிர் மரபினன் ஆளுகையின் கீழிருந்தது என்பதை,

**மணம்நாறு மார்பின் மறப்போர் அகுதை**
**குண்டுநீர் வரைப்பின், கூடல்அன்ன**
**கவைஇருங் கூந்தல் வருமுலை சேப்ப**
**(புறம். 347:5-7.)**

என்ற பாடல் அகுதை ஆட்சியிலிருந்த ஊர் கூடல் என்பதை வலியுறுத்துகின்றது. இவனும் இவன் தந்தையும் பரிசிலர்க்கு வரையாது வழங்கிச் சிறப்புப் பெற்றனர் என்பதை,

**இன் கடுங் கள்ளின் அஃதை களிற்றொடு**
**நன்கலன் ஈயும் நாள் மகிழ் இருக்கை**
**அவை புகு பொருநர் பறையின் (அகம். 76:3-5)**

என்ற பாடலாலும்,

**திருவீற்றிருந்த தீதுநீர் நியமத்து**
**மாடம்மலி மறுகின் கூடற் குடவயின**
**(முருகு. 70-71.)**

**தான்வாட, வாடாத தன்மைத்தே**
**தென்னவன் நான்மாடக் கூடல் நகர்**
**(பரி. மதுரை, பா.7:3-4.)**

என்ற பாடலாலும் அறியலாம்.

அந்த நகரைப் பாண்டியர்கள் கைக்கொண்ட பின் பாண்டியர் தலைநகரமாக மாறிவிட்டது. மறுபடியும் வேளிர்களால் கைப்பற்ற முடியவில்லை. மதுரையை நினைக்கும்போதெல்லாம் பாண்டியர்கள்தான் நினைவுக்கு வருவர்.

ஆனால் பாண்டியருக்கு முன் அது வேளிருக்குரியது எனக் கருத இடமுண்டு.

**பாண்டியர் கூடல் வெற்றி**

பாண்டியர்கள்கூடல்மீதுபடையெடுத்துச் சென்று வெற்றி பெற்றுள்ளனர். கூடலின் வெற்றியை,

**பேர்இசைக் கொற்கைப் பொருநன், வென்வேல்**
**கடும்பகட்டு யானை நெடுந்தேர்ச் செழியன்,**
**மலைபுரை நெடுநகர் கூடல் நீடிய**

**(அகம் 296. 10-12)**

என்று அகநானூறுப் பாடல் விரிவாக எடுத்து இயம்புகிறது. கொற்கைக்குத் தலைவனாக விளங்கும் நெடுந்தேர்ச்செழியன் கூடலில் நீண்ட நாட்கள் தங்கியிருந்தான் என்பதும், பாண்டியர்கள் முதலில் கொற்கையை ஆட்சி செய்தார்கள் என்பதும் இதனால் பெறப்படும்.

**கருவூர் வேளிர் தலைநகர்**

கருவூரில் கிடைக்கும் கணையாழிகள் சிலவற்றில் வேளிர் பெயர்கள் காணப் படுகின்றன. வேளியசம்பன், ஸாதன் ஸாத்துவேள், நெல் வேளை ஆகிய பெயர்கள் குறிப்பிடத்தக்கவை. இவை வேளிர்க்குரியவை[14] மேலும் புறநானூறு 13ஆம் பாட்டு அடிக்குறிப்பில் சேரமானும் மோசிகீரனாரும் வேண்மாடத்துஅமர்ந்திருந்தபோதுசோழனின் மதம் பிடித்த யானை கருவூருக்குள் வந்து விட்டதைச் சேரன் தவறாக நினைத்து விட்டான் என்று கூறும்போது அரண்மனை வேண்மாடம் என்று கூறப் பெறுகின்றது. ஆகையால் கருவூரும் கொங்கு வேளிர்களின் தலைநகராயிருந்தது எனலாம். யானைப் படையையும் தேர்ப்படையையும் கொண்ட சேரனின் தலைநகரம் கருவூர் என்பதனை,

**ஆள் கோள் பிழையா, அஞ்சுவரு தடக்கை**
**கடும் பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை**
**திரு மா வியல் நகர்க் கருவூர் முன்துறை**

**(அகம். 93:19-21)**

என்ற பாடல் வழிக் காணலாம்.

பாண்டியனின் கூடல் வெற்றிக்குப் பின்னும் சேரனின் கருவூர் வெற்றிக்குப் பின்னும் இவ்விரு நகரங்களும் முறையே பாண்டியர் தலைநகர் என்றும் சேரர் தலைநகர் என்றும் நிலைபெற்றுவிட்டன. அவ்வாறே உறந்தையும் அமைந்துள்ளது. மூவேந்தர்களும் இந்த நகரங்களின் மீது படையெடுத்துக் கைக்கொண்டமைக்குக் காரணம் பெருவழி வாணிகமும், அதனால் குவிந்த பொருள்வளமும் ஆகும்.

“கருவூரில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரோமானியக் காசுகள் கிடைத்துள்ளன[15] கொங்கு நாடு முழுவதும் ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட ரோமானியக் காசுகள் கிடைத்துள்ளன. “இது இந்தியா முழுவதும் கிடைத்த ரோமானியக் காசுகளில் 80 விழுக்காடு ஆகும்”.[16] இதன் காரணத்தினாலே மூவேந்தர்களும் கொங்கு நாட்டின் மீது படையெடுத்தனர். அந்த முயற்சியில் சேரர்கள் வெற்றி பெற்றனர். சேரர்கள் தகடூர் மீது படையெடுத்ததற்குக் காரணம் தகடூர் வழியாகச் சென்ற தெற்கு வழியைத் தங்கள் ஆதிக்கத்தில் வைத்திருக்கவே ஆகும்.

**முசிறி**

மீன்களைவிற்றுஅதன்விலைக்குமாறாகப் பெற்ற நெற்குவியல்களும், வீடும் தோணியும் பிரித்தறிய வாராதபடி காண்பாரை மயக்கச் செய்யும் மனையிடத்தே குவிக்கப் பெற்ற மிளகுப் பொதிகளும், கழிகளில் இயங்கும் தோணிகளால் கரைசேர்க்கப்பெற்ற மலைபடு பொருள்களும், கடல்படு பொருள்களும் முசிறித் துறைமுகத்தில் நெருங்கிக் கிடந்தன என்பதனை,

**மீன்நொடுத்து நெற்குவைஇ**
**மிசையம்பியின் மனைமறுக்குந்து**
**மனைக்குவைஇய கறிமுடையாற்**
**கலிச்சும்மைய கரைகலக்குறுந்து**
**கலந்தந்த பொற்பரிசம்**
**கழித்தோணியாற் கரைசேர்க்குந்து**
**மலைத்தாரமுங் கடற்றாரமும்**
**தலைப்பெய்து வருநர்க்கீயும்** **(புறம். 343 1-8.)**

முசிறித் துறைமுகத்தில் இருந்த மரக்கலங்கள் பொன்னைக் கொணர்ந்து தந்துவிட்டு அதற்கீடாக மிளகை ஏற்றிச் சென்ற குறிப்பு

*யவனர் தந்த வினைமாண் நன்கலம்*
*பொன்னொடு வந்து கறியொடு பெயரும்*
*(அகம். 149:9-10)*

என்று காணப்படுகின்றது.

### கொற்கை

முத்தால் மாட்சிமையுற்றது கொற்கை என அகநானூறு நவில்கிறது.

*மறப்போர்ப் பாண்டியர் அறத்திற் காக்கும்*
*கொற்கையம் பெருந்துறை முத்தின் அன்ன,*
*(அகம். 27:8-9)*

என்ற அகப்பாடலால் இதனை அறியலாம்.

பாண்டிய நாட்டில் தாமிரபரணியின் சங்க முகத்தில் அமைந்த பழைய துறைமுகப்பட்டினம் கொற்கை. இது முத்துக்கள் விளைகின்ற கடற்பரப்பினைக் கொண்டது என்பதனை,

*முத்துப் படு பரப்பின் கொற்கை முன் துறை*
*(நற். 23. 6.)*

எனவும்,

*விளைந்து முதிர்ந்த விழுமுத்தின்*
*இலங்கு வளை, இருஞ்சேரி,*
*கட் கொண்டிக் குடிப்பாக்கத்து,*
*நற் கொற்கையோர் நசைப் பொருந*
*(மதுரை. 135-138.)*

எனவும் குறிக்கப்படுகிறது.

எனவே இப்பாடல்களால் கொற்கையானது முத்துகள் விளைகின்ற துறைமுகம் என்பது புலனாகிறது.

*கொற்கைத் துறைமுகத்தே நடந்த முத்து வாணிகத்தினை*
*மகாஅர் அன்ன மந்தி, மடவோர்*
*நகாஅர் அன்ன, நளிநீர் முத்தம்*
*வாள்வாய் எருத்தின் வயிற்றகத்து அடக்கி*
*(சிறுபாண். 56-58.)*

என சிறுபாணாற்றுப்படையும் சுட்டுகின்றன. பெரு நகரங்கள் மட்டுமன்றி சில ஊர்களின் பெயர்களையும் அகநானூறு சுட்டுகிறது.

வானவரம்பன் என்னும் சேரனுடையது வெளியம் என்னும் ஊர் என்பதனை,

*..............................................அவரே*
*வான வரம்பன் வெளியத்து (அகம். 359:6)*

என்று அகநானூறும் உணர்த்துகின்றன.

### வாகைப் பெருந்துறை

குட நாட்டைச் சார்ந்த ஊர் வாகைப்பெருந்துறை. களங்காய்க் கண்ணி நார் முடிச் சேரல் தானிழந்த நாட்டை மீண்டும் பெறுவதற்காக நன்னனுடன் போரிட்ட இடம் வாகைப் பெருந்துறை. அப்போரில் நன்னன் இறந்தான் என்பதனை,

*பெருந்தோள் அரிவை ஒழிய, குடாஅது*
*இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்,*
*பொலம்பூண் நன்னன் பொருது களத்து ஒழிய,*
*வலம்படு கொற்றம் தந்த வாய்வாள்,*
*களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்*
*இழந்த நாடு தந்தன்ன (அகம். 199:18-23)*

என்ற இப்பாடல் மூலம் அறியலாம்.

### குழுமூர்

சேர மன்னன் உதியன் ஆட்சியில் இருந்த ஊர் குழுமூர். ஆநிரையின் மிகுதியைக் கொண்ட அவ்வூர் பல்லான் குன்று என்னும் மலைக்கு அருகில் அமைந்துள்ளது. அவ்வூர் உள்ள உதியனுடைய அட்டில் எப்போதும் ஓசை நிரம்பியதாய் இருக்கும் என்பதனை,

*பல்ஆன் குன்றில் படுநிழல் சேர்ந்த*
*நல்ஆன் பரப்பின் குழுமூர்; ஆங்கண் -*
*கொடைக்கடன் என்ற கோடா நெஞ்சின்*
*உதியன் அட்டில் போல ஒலி எழுந்து*
*(அகம் 168: 4-7)*

என்ற பாடலால் அறியலாம்.

### முடிவுரை

- பண்பாடு என்பது பற்றிக் கூறவந்த உ.ஆ. டைலர் சமுதாய உறுப்பினர் என்ற முறையில் தனிமனிதன் பின்பற்றும் கலை, நீதி, பழக்கவழக்கங்கள் ஆகியன அடங்கும் என்ற கருத்து காணலாகிறது.
- சங்க கால வரலாற்றில் கி.மு 5-ம் நூற்றாண்டு முதல் கி.பி. 2-ம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் நகரம் படிப்படியாக வளர்ச்சி பெற்று வந்தது. இந்த வளர்ச்சி அகநானூற்றிலும், பத்துப்பாட்டிலும், பட்டினப்பாலையிலும், மதுரைக் காஞ்சியிலும் தெளிவாகப் பேசப்படுகின்றது.

- *நகரத்தில் பல்வேறு வகுப்பைச் சார்ந்த மக்கள்வாழ்ந்தனர்என்பது இந்நூல்களால் தெளிவாக அறியமுடிகிறது.*
- *அந்தக் காலத்து மக்கள் ஓர் அரசனின் கீழ் அமைதியாக வாழ்வதற்கு பாதுகாப்பும், அறநெறியும், தொழில் செய்வதற்கான உரிமையும் பெற்றிருந்தனர்.*
- *அகநானூற்றுப் பெண்கள் கள், மீன், உப்பு ஆகியவற்றை விற்றதற்கான அகஇலக்கியச்சான்றுகள்காட்டப்பட்டுள்ளன.*
- *நகரங்களில் பல்வேறு பண்டங்கள், அழகுமணிகள் பொற் காசுகள், கணையாழிகள் போன்றவை வணிகப் பொருள்களாக விற்கப்பட்டதற்கான சான்றுகள் அகநானூற்று வழி அறிய முடிகிறது.*
- *அகநானூற்றில் சிற்றூர், ஊர், நகரம், நாடு ஆகியன குறிக்கப்பட்டுள்ளன. இங்கு நியமம் என்ற சொல் நகரத்தைக் குறிக்க பயன்பட்டுள்ளது என்பது நிறுவப்பட்டுள்ளது. நகரங்களில் கருவூர், சிராப்பள்ளி, மதுரை, உறையூர், கொற்கை, முசிறி, என்பன அகநானூற்றில் சுட்டப் பெற்றுள்ளன. ஊர்களில் வெளியம், வாகைப் பெருந்துறை, குழுமூர்ஆகியன சுட்டபெற்றுள்ளன.*
- *அகநானூறு குறிப்பிடும் நகரங்கள் மற்றும் ஊர்களில் நடைபெற்ற தொழில்களும், தொழிலாளர்களின் பண்பும் தெளிவுறுத்தப்பட்டுள்ளன.*
- *அரசுகள் நகர்மயமானதையும் அரச உறவுகள் மேம்பட்டமையும் அகநானூறு விளங்குகிறது.*

**சான்றெண் விளக்கம்**


1. Tamil Lexicon, Vol. V, P. 2124.
2. *மேலது. ப. 2124.*
3. *ர. பூகுன்றன், தொல்பொருள் ஆய்வக உதவி இயக்குநர்அவர்கள் கருத்து.*
4. K.Rajan, Early Writing System, P.18.
5. R.S. Sharma, Urban Deccay in India, P.12.
6. *கா. ராஜன், கொடுமணல் அகழாய்வு, பக்.26-30.*
7. *தி.ஸ்ரீ. ஸ்ரீதர், தமிழ்-பிராமிக் கல்வெட்டுகள், ப.23.*
8. *தி.ஸ்ரீ. ஸ்ரீதர், தமிழ்-பிராமிக் கல்வெட்டுகள்,ப. 23.*
9. R.S. Sharma, Urban Deccay in India P.13.
10. South Indian, Inscription, vol. 7, 124.
11. *தி.ந. சுப்பிரமணியன், பல்லவா; செப்பேடுகள் முப்பது, ப. 65.*
12. P.T. Srinivas Ayangar, The History of Tamils, p.206.
13. K.N. Sivaraja Pillai, The Chronology of Early Tamils, Geneology, No page.
14. Bº. §[SßÓß, öPõ[Pzx ÷ÁÎº, \‰P ÂgbõÚ®, CuÌ. 47. £.14.
15. R. Nagaswamy. Roman Karur, p.38.
16. *கொடுமுடி சண்முகப் பிரகதம், ஆய்வுத் தேன் ப.1-8.*